1981 ஏப்ரல் 21]

(இ) மேற்படி மருந்தகத்தில் கூடுதலான பெண் டாக்டர் நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ் வினாக்களுக்கு இடமில்லை.

காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 821— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) காஞ்சிபுரத்தில் உள்ள மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி தனியாக திறக்கப்பட்டு நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) காஞ்சீபுரம் மாவட்ட தலைமையிட மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி ஏற்கனவே திறக்கப்பட்டு, நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற படுக்கைகள் ஒதுக்கப்பட்டு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

(ஆ) இக் கேள்வி எழாது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : காஞ்சீபுரம் மருத்துவமனையில் சித்த மருத்துவப் பகுதியில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வசதிகள் இல்லை என்பதை நான் நேரடியாக அந்த மருத்துவமனைக்குச் சென்றபோது அறிந்தேன். ஆகவே அங்கே நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வசதிகள் செய்து தரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஒவ்வொரு தலைமை மாவட்ட மருத்துவமனையிலும் 15 படுக்கைகள் சித்த வைத்தியத்திற்காக ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள்

ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் பல்வேறு மாவட்ட மருத்துவமனைகளில் 15 படுக்கைகள் இருக்கின்றன. இந்தக் காஞ்சீபுரம் மருத்துவமனையில் எவ்வளவு படுக்கைகள் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோமோ அதை விட குறைவாக இருக்கிறது. இப்போது அங்கும் 15 படுக்கைகள் இருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: இந்தச் சித்த மருத்துவப் பகுதிக்கு ஒரே ஒரு மருத்துவர்தான் இருக்கிறார். இதற்குக் கூடுதல் மருத்துவர்களையும் அவர்களுக்கு வேண்டிய உதவியாளர்களையும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: புறநோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்தப் படுக்கைகள் சரியான வகையில் பயன்படுத்திக்கொள்ளப்படுமா என்று பார்த்து பிறகு இன்னொரு மருத்துவரை நியமிக்கலாமா என்பதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. இல. பலராமன்: அலோபதி வைத்திய முறையைக் காட்டிலும் சித்த வைத்தியத்திற்கு மக்கள் மத்தியில் இப்போது ஒரு கவர்ச்சி ஏற்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே மாவட்ட அளவில் என்று மட்டுமல்லாமல் தாலுகா மட்டத்திலும் இந்தச் சித்த மருத்துவ முறையை விஸ்தரிக்க அரசு முன்வருமா? அலோபதி வைத்திய முறையில் தீராத சில நோய்கள் இந்தச் சித்த வைத்தியத்தில் தீருகின்றன என்று மக்கள் சொல்கிறார்கள். என்னென்ன வியாதிகளை இந்தச் சித்த வைத்தியம் போக்குகிறது என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: என்னென்ன நோய்கள் என்ற அந்தப் பட்டியலைக் கொடுக்க முடியாது, பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். நேரமும் இல்லை. இருந்தாலும் அது இங்கே சொல்லக்கூடிய கருத்தும் இல்லை. ஏற்கனவே இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தை உறுப்பினர் அவர்கள் கூர்ந்து கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். சென்ற ஆண்டைவிட 40 சதவீதம் இந்த ஆண்டு அதற்காக ஜாஸ்தி $2\frac{1}{4}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்திருப்பார்கள். அதன் மூலமாகத்தான் எந்தளவிற்கு நாம் சித்த வைத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறோம்

என்பதை நிச்சயமாக உறுப்பினர் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். அவர்களது பாராட்டுதல்களை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

### கரடிக்குப்பம் கிராமத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையம்.

*வினா எண். 822 திரு.—சி. கோபல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வாலாசா வட்டம், கரடிக்குப்பம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தனி மருத்துவர் இல்லாதது உண்மையா ?

(ஆ) இந்த சுகாதார நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை. வட ஆற்காடு மாவட்டம், வாலாசா வட்டம், கரடிக்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கிடையாது. அங்கு ஓர் அரசினர் மருந்தகம் தான் உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. கோபால் : என் தொகுதியில் உள்ள கரடிக்குப்பம் கிராமத்தில் உள்ள மருந்தகத்தில் ஏறக்குறைய நாள்தோறும் 200-க்கு மேற்பட்ட நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். அந்நிலையில் அங்கே முழுநேரம் இருந்து கவனித்துக்கொள்ள ஒரு மருத்துவர் அங்கே இல்லை என்ற காரணத்தால் மக்கள் வசதி கருதி உடனடியாக அங்கே ஒரு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்து எந்தளவிற்கு உண்மை என்றால் அந்த மருந்தகத்திற்கு ஏற்கனவே டாக்டர் நியமித்திருந்தோம். டாக்டர் ஜே. ரவிச்சந்திரன் என்பவரை 1—7—1980-ல் நியமித்தோம். பிறகு அவர்கள் அங்கே சரியான வகையில் பணியாற்றவில்லை என்பதால் டாக்டர் பி. எஸ். மனோகரனை நியமித்தோம். அவர்களுக்கு